# இயேசு கிறிஸ்துவின் உவமைகள்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

3

படங்களுடன்

அவன் அந்த விலையுயர்ந்த முத்தைக் கண்டு தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த முத்தைக் கொள்கிறான். அதுதான் இங்கு நடக்கிறது. உங்களுக்கு அறிவில் விளைந்த கருத்து உள்ளது. உங்களுக்கு வேத சாஸ்திர அனுபவம் உள்ளது. ஆனால் நீங்கள் உண்மையானதை கண்டு கொள்ளும் நேரம் வரும்போது, நீங்கள் எல்லாவற்றையும் அறுத்தெரிந்து, அதற்குள் நுழைந்து கொள்கிறீர்கள்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்




## மத்தேயு 13:44-46

44. அன்றியும், பரலோகராஜ்யம் நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது; அதை ஒரு மனுஷன் கண்டு, மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த நிலத்தைக் கொள்ளுகிறான்.

45. மேலும், பரலோகராஜ்யம் நல்ல முத்துக்களைத் தேடுகிற வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது.

46. அவன் விலையுயர்ந்த ஒரு முத்தைக் கண்டு, போய், தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அதைக் கொள்ளுகிறான்.

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

# 63-0717 கிறிஸ்துவினால் கட்டப்பட்டவனுயிருக்கிற பவுல்

Jeffersonville, Indiana, USA

32. பவுல் தன் காலத்தில் சிறந்த அறிவாளியாக இருந்தான். அவனுக்கு பெரியவனாக வேண்டும் என்னும் ஆவல் குடிகொண்டிருந்தது. அவன் சிறந்த மேதைகளிடம் கல்வி பயின்றான். கமாலியேல் என்னும் பெயருடைய ஒரு சிறந்த ஆசான் இருந்தான். அவன் அக்காலத்தில் மிகச் சிறப்பாக விளங்கிய பள்ளிக்கு சென்றான் என்று நான் கூற முடியும். உதாரணமாக இன்று நாம் பெற்றுள்ள வீடன், பாப் ஜோன்ஸ் போன்ற சிறந்த பள்ளிகள் போல் அவன்

வார்த்தையின் ஊழியக்காரனாவதற்கு பயின்றான். அவன் நன்கு கல்வி கற்றவன், சமார்த்தியமுள்ளவன், மிகவும் புத்திசாலியான ஒரு இளைஞன். அவன் பெரியவனாக வேண்டுமெனும் நோக்கம் அவனுக்குள் இருந்தது. என்றாவது ஒரு நாள் அவன் பிரதான ஆசாரியனாக வேண்டுமென்று விரும்பினான்.



33. அவனுக்கு பெரியவனாக வேண்டுமெனும் நோக்கம் இருந்தது. அந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டும் என்பதற்காகவே அவன் பயிற்சி பெற்றான்.

அவன் தன் வாழ்நாள் முழுவதையும் அதற்கென்று கழித்தான் - ஒருக்கால் 8 அல்லது 10 வயது தொடங்கி 30 அல்லது 35 வயது வரைக்கும் பயின்று, கல்லூரி படிப்பை முடித்து பட்டங்களை பெற்றிருப்பான். அவன் அக்காலத்து குருமார்களின் சார்பில் இருந்தான். அவன் எருசலேமிருந்த பிரதான ஆசாரியனிடமிருந்து தனிப்பட்ட கட்டளை பெற்றான். அது எழுதப்பட்டு, நம்பத்தகுந்த இந்த சவுலிடம் ஒப்படைக்கப்பட்டது. அவன் தமஸ்குவுக்குச் சென்று அவனுடைய கருத்துக்கு மாறான விதத்தில் தேவனை ஆராதிப்பவர்களைக் கட்டி, சிறையிலடைத்து, அவனுக்கு விருப்பமானால் அவர்களைக் கொல்லவும் அவனுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது. அவன்... அவனுக்கு பெரியவனாக வேண்டுமெனும் நோக்கம் இருந்தது. அதற்காக அவன் பெற்ற பயிற்சி அனைத்தும் - தேவன் எல்லாவற்றையும் அவனை விட்டு எடுத்துப் போட்டார். அவனுடைய நோக்கம், அதை நிறைவேற்ற அவன் தந்தை அவனுக்கு செலவு செய்த

தொகை, அவன் பெற்றோர் அவன் பெரியவனாக வேண்டுமென்று கொண்டிருந்த நோக்கம். இவையெல்லாம் அவனை விட்டு நீக்கப்பட்டது. ஏனெனில் தேவன் அவனுக்காக வேறொன்றை வைத்திருந்தார். எனவே அவன் வாழ்க்கையில் கொண்டிருந்த குறிக்கோளுக்கு கட்டப்பட்டவனாக இருப்பதை தவிர்த்து, வார்த்தையாகிய இயேசு கிறிஸ்துவுக்கு கட்டப்பட்டவனாக மாறினான்.



34. தமஸ்குவுக்கும் போகும் வழி பவுலை மாற்றினது. பகல் வேளை சுமார் 11 மணிக்கு அவன் போய்க் கொண்டிருந்தபோது, அவன் கீழே வீழ்த்தப்பட்டான். அப்பொழுது, “சவுலே, நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?'' என்று தன்னுடன் சொல்லுகிற ஒரு சத்தத்தை கேட்டான். அவன் அண்ணாந்து பார்த்து, அவன் யூதனாயிருந்தபடியால், அந்த அக்கினி ஸ்தம்பம் இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்தின கர்த்தர் என்பதை அறிந்து கொண்டான். இதை ஞாபகம் கொள்ளுங்கள், இந்த யூதன் வேறொருவரையும் 'ஆண்டவரே' ஏலோகிம் என்று அழைத்திருக்க மாட்டான். அவன் பயிற்சி பெற்ற அறிவாளியானதால் அவர் யாரென்று திருப்தி கொள்ளாமல் அப்படி அழைத்திருக்கவே மாட்டான். அவன் அண்ணாந்து பார்த்தபோது, தன் ஜனங்களை வனாந்திரத்தில் வழி நடத்தின இந்த ஒளியை அக்கினி ஸ்தம்பத்தை - அவன் கண்டான். அவன் உடனே 'ஆண்டவரே' ஏலோகிம்

'ஆண்டவரே' ஏலோகிம் "ஆண்டவரே, நீர் யார்? " என்றான்.



35. அவர், "...இயேசு நானே..." என்று கூறினபோது, வேத சாஸ்திரம் படித்திருந்த இவனுக்கு எவ்வளவு ஆச்சரியமாய் இருந்திருக்கும்! அவன் யாருக்கு விரோதமாயிருந்தானோ அவர். என்ன ஒரு திருப்பம்! ஓ, உயரிய குறிக்கோள்களைக் கொண்டிருந்த இந்த மனிதனுக்கு, அவன்

யாரைத் துன்பப்படுத்துகிறான் என்று கேட்டபோது, எவ்வளவு பயங்கரமான அதிர்ச்சியாய் இருந்திருக்கும்! அவனுடைய ஆசைகள் அவன் செய்ய வேண்டுமென்று நியமிக்கப்பட்டிருந்த முக்கியமான காரியத்திலிருந்து அவனைத் தூர விலக்கியிருந்தன. அவர், "...இயேசு நானே..." என்று கூறினதைக் கேட்டபோது, இந்த அப்போஸ்தலனுக்கு அது எவ்வளவு பெரிய அதிர்ச்சியாய் இருந்திருக்கும்! அவன் துன்பப்படுத்தின அவர்! "நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" இங்கு ஒரு முக்கியமான காரியத்தை நாம் உணரவேண்டும்... அதாவது, சபையை பரியாசம் செய்கிறவர்கள் உண்மையில் சபையைப் பரியாசம் செய்யவில்லை, அவர்கள் இயேசுவைப் பரியாசம் செய்கின்றனர். "...என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய்?" நுண்ணறிவு படைத்த பவுல்... அவன் இந்த கூட்டத்தினரை துன்புறுத்தினதின் மூலம் அவன் சேவிப்பதாக உரிமை கோரின அந்த தேவனை

துன்புறுத்தினான் என்பதை அவனால் எப்படி நம்ப முடிந்திருக்கும்? இதை அதிகமாக விளக்க அவசியமில்லை என்று எண்ணுகிறேன். நான் கூறுவதன் அர்த்தத்தைப் புரிந்து கொள்ள நாம் அனைவரும் நன்கு பயிற்சி பெற்றிருக்கிறோம். அதுவே இன்றைக்கும் நடக்கிறது.



36. பவுல் அறியாமையின் காரணமாக - இருப்பினும் அவன் மிகவும் புத்திசாலி, சமார்த்தியமுள்ளவன். அவன் துன்பப்படுத்தின படிப்பில்லாத கலிலேயர்களைக் காட்டிலும் மிகவும் சமார்த்தியமுள்ளவன். இவர்கள் தங்கள் தாழ்மையில் பெருமளவில் இயேசுவை ஏற்றுக் கொண்டனர். ஆனால் பவுலோ அதிகம் படித்தும் நுண்ணறிவு படைத்திருந்தும் கூட, அவனால் அதை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தமஸ்குவுக்குப் போகும் வழியில் அது அவனுக்கு எத்தகைய திருப்பமாயிருந்திருக்கும்... ஒளி அவனைத் தாக்கியதால் அவன் பார்வையிழந்தான். எனவே அவனால் தன் பணியை நிறைவேற்ற முடியவில்லை. அவன் நேர்த்தெரு என்னப்பட்ட தெருவுக்கு அழைத்து செல்லப்பட்டான். அது ஒரு தீர்க்கதரிசியின் வீடாயிருந்தது. அப்பொழுது அனனியா என்னும் பெயருடைய ஒரு தீர்க்கதரிசி அவனை அங்கு சந்தித்தான். பவுல் வருவதை

அவன் ஏற்கெனவே தரிசனத்தில் கண்டு, அவன் இருந்த இடத்தை அடைந்து, "சகோதரனாகிய சவுலே, நீ வந்த வழியில் உனக்குத் தரிசனமான இயேசுவாகிய கர்த்தர், நீ பார்வையடையும்படிக்கும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்படும்படிக்கும் உன் மேல் கைகளை வைக்கும்படி என்னை அனுப்பினார்" என்றான்.



37. அது எங்கு வந்து விட்டதென்று பார்த்தீர்களா? அது பவுலுக்கு எப்படிப்பட்டதாய் இருந்திருக்கும்!

பாருங்கள், அவன் செய்வதற்காக பெற்ற பயிற்சி அனைத்தும் வீணாய் போனது. அவனுடைய கல்வி அனைத்தும் ஒன்றுமில்லாமல் போனது. அவனுக்கு ஒரு அனுபவம் உண்டானதென்று அவன் அறிந்து கொண்டான். இது நமக்கு மற்றுமொரு பாடம். அதாவது அனுபவம் மாத்திரம் போதாது, அது தேவனுடைய வார்த்தையின்படி உள்ள அனுபவமாக இருத்தல் அவசியம். எனவே, அவன் ஒருமுறை அதை கண்டு, அது அவனுக்கு முன்பு இருந்த மற்றவர்கள் பெற்ற மகத்தான ஒன்று என்பதை அறிந்து, அப்பொழுது இருந்த வேதாகமத்தை (பழைய ஏற்பாட்டை) கையிலெடுத்துக் கொண்டு, அரபிதேசத்து பாலைவனத்தில் மூன்று வருடம் ஆறு மாதங்கள் செலவழித்து, அவனுடைய அனுபவம் வேத பூர்வமானதா என்று அதனுடன் ஒப்பிட்டு பார்த்தான்.

38. அவன், "அது ஒரு சிறு விபத்து. நான் அறிவாளிகளையே பின்பற்றுவேன்" என்று கூறியிருந்தால்! அவன் கட்டப்பட்டவனாக ஆக வேண்டியிருந்தது.



எனவே அவன் ஒப்பிட்டு பார்த்த பிறகு... முன்னடையாளங்களை உபயோகித்து எபிரெயர் நிரூபத்தை எழுதினான். பாருங்கள், மூன்றரை வருட காலமாக அவன் அங்கு வார்த்தையில் கிடந்திருந்து, அவனை அழைத்த அதே தேவன் அவனுடைய அறிவு அனைத்தும் மாற்றுவதைக் கண்டான் - அவனுடைய சிந்தனை அனைத்தும், அவன் எதுவாக இருக்க பயிற்சி பெற்றானோ அது அனைத்தையும், அவனுடைய நோக்கம் அனைத்தும் அவனை விட்டு எடுத்துப் போட்டார். அவன் கட்டப்பட்டவனானான். தேவனுடைய அன்பு மிக அதிகமாக இருந்து,

வெளிப்பாட்டை பெற்றபோது, அவனால் அதிலிருந்து விலகிச் செல்ல முடியவில்லை. தேவனை சந்திக்கும் ஒவ்வொரு உண்மையான விசுவாசியின் அனுபவமும் அதுவே. நீங்கள் பெரிய ஒன்றுடன் தொடர்பு கொள்ள நேரிடும்போது... நீங்கள் மற்றெல்லாவற்றையும் விட்டு அதற்கு கட்டப்பட்டவர்களாகிவிடுகிறீர்கள். பாருங்கள், மற்றெல்லாவற்றிலிருந்தும் நீங்கள் விலகி, இதற்கு கட்டப்பட்டவர்களாகிவிடுகிறீர்கள். பாருங்கள், மற்றெல்லாவற்றிலிருந்தும் நீங்கள் விலகி, இதற்கு கட்டப்பட்டவர்களாகிவிடுகிறீர்கள்.

39. ஒருமுறை இயேசு, "பரலோக ராஜ்யம் ஒரு விலையுயர்ந்த முத்தை வாங்கும் வியாபாரிக்கு ஒப்பாயிருக்கிறது" என்றார். அவன் அந்த விலையுயர்ந்த முத்தைக் கண்டு தனக்குண்டான எல்லாவற்றையும் விற்று, அந்த முத்தைக் கொள்கிறான். அதுதான் இங்கு நடக்கிறது. உங்களுக்கு அறிவில் விளைந்த கருத்து

உள்ளது. உங்களுக்கு வேத சாஸ்திர அனுபவம் உள்ளது. ஆனால் நீங்கள் உண்மையானதை கண்டு கொள்ளும் நேரம் வரும்போது, நீங்கள் எல்லாவற்றையும் அறுத்தெரிந்து, அதற்குள் நுழைந்து கொள்கிறீர்கள்.



40. அது என்னவென்று பவுல் அறிந்திருந்தான். அவன் ஏதோ ஒன்றுக்குள் சேணம் பூட்டி கொண்டு வரப்பட்டதை உணர்ந்தான்... நாம் குதிரைக்கு சேணம் பூட்டி கொண்டு வருவது போல் ஏதோ ஒன்றை இழுக்க, பவுல் தான் பெற்ற அனுபவத்தை மூன்றரை வருட காலமாக வேதத்துடன் ஒப்பிட்டுப் பார்த்த பிறகு, தேவன் அவனைப் பரிசுத்த ஆவியின் மூலம் தெரிந்து கொண்டார் (அவனுக்கு சேணம் பூட்டினார்) என்பதை உணர்ந்தான். அவனுடைய அனுபவத்தின் மூலம் புறஜாதிகளின் முன்னால் சுவிசேஷத்தை இழுத்துக் கொண்டு வர வேண்டுமென்று. பரிசுத்த ஆவியானவரே அவனுக்கு சேணம் பூட்டினார்.

41. இன்றைக்கு கிறிஸ்துவின் ஊழியக்காரர் என்னும் முறையில் நாமும் கூட சேணம் பூட்டப்பட்டு அடக்கி உள்ளே கொண்டு வரப்படுகிறோம். நாம் வார்த்தைக்கு சேணம் பூட்டப்பட்டுள்ளோம். யார் என்ன கூறினாலும் கவலையில்லை. நீங்கள் அதற்கு சேணம்

பூட்டப்பட்டிருக்கிறீர்கள். அதில் ஏதோ ஒன்றுள்ள காரணத்தால், அதிலிருந்து நீங்கள் விலகிச் செல்ல முடியாது. நீங்கள் பரிசுத்த ஆவியினால் அதனுடன் நுகத்தில் பிணைக்கப்பட்டிருக்கிறீர்கள். அது வார்த்தையுடன் உங்களை நுகத்தில் பிணைத்தது. யார் என்ன கூறினாலும் வார்த்தை உங்களுடன் வருகிறது. அதற்குள் சேணம் பூட்டப்பட்டு கொண்டு வரப்பட்டு அதனுடன் நுகத்தில் இணைக்கப்பட்டிருக்கிறீர்கள். அவன் பரிசுத்த ஆவியைக் கொண்டு வார்த்தைக்கு அடக்கிக் கொண்டு வரப்பட்டான். அவன் அரபி தேசத்து பாலைவனத்தில் மல்லாந்து படுத்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய பழைய காரியங்கள், அனுபவங்கள், குறிக்கோள்கள் அவனிலிருந்து களையப்பட்டன. அவ்வாறே நாமும் களையப்பட வேண்டுமென்று இன்று நாம் காண்கிறோம். ஜனங்கள் களையப்பட விரும்புவதில்லை. மெதோடிஸ்டு சகோதரன் தன் மெதோடிஸ்டு போதகத்தை சிறிது பற்றிக் கொள்ள விரும்புகிறான். அது போல

பாப்டிஸ்டு சகோதரனும் தன் பாப்டிஸ்டு போதகத்தை சிறிது பற்றிக் கொள்ள விரும்புகிறான். பாருங்கள், ஆனால் நீங்கள் முற்றிலுமாக அவைகளிலிருந்து களையப்பட்டு, புதிதாக மறுபடியும் பிறந்து, பரிசுத்த ஆவி உங்களை வழி நடத்துவது போல அங்கிருந்து தொடங்க வேண்டும். “என் தகப்பனார் போதகருடன் சபையில் கைகுலுக்கின போது இதை பெற்றுக் கொண்டார். அவர் விசுவாசமுள்ள சபை உறுப்பினர்” என்று நீங்கள் சொல்ல முடியாது. அது அவருடைய இனத்துக்கு சரியாயிருந்திருக்கும். ஆனால் நாமோ வேறு இனத்தை சேர்ந்தவர்கள். இக்காலத்தில் நாம் வேதாகம நாட்களுக்கு திரும்பி வர வேண்டியவர்களாயிருக்கிறோம்.




ஆனால் அதன் மீது வலை வீசப்பட்டபோது மீன், மீனாகத்தான் இருந்தது. நாம் மீனுக்காக வலையைப் போடுகிறோம். அதை தேவன் ஒருவர் மட்டுமே தீர்மானிக்க முடியும்.



வில்லியம் மரியன் பிரன்ஹாம்




## மத்தேயு 13:47-50

47. அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே போடப்பட்டு, சகல விதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.

48. அது நிறைந்தபோது, அதைக் கரையில் இழுத்து உட்கார்ந்து, நல்லவைகளைக் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்துபோடுவார்கள்.

49. இப்படியே உலகத்தின் முடிவிலே நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு, நீதிமான்களின் நடுவிலிருந்து பொல்லாதவர்களைப் பிரித்து,

50. அவர்களை அக்கினிச் சூளையிலே போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் என்றார்.

# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## 57-0324 ஏன் சில மக்களால் வெற்றியை காத்துக்கொள்ளமுடியவில்லை? Oakland, California, USA

18. பூமியில் இருக்கப்போகிற ஒவ்வொரு நபரையும் தேவன் ஆதியிலேயே அறிந்திருந்தார்.

மேலும் பூமியின் மீது இருக்கப் போகிற ஒவ்வொரு ஈயையும், ஒவ்வொரு தெள்ளுப்பூச்சியையும், ஒவ்வொன்றையும் அவர் அறிந்திருந்தார்.

அவர் முடிவற்றவர், அவர் எல்லாவற்றையும் முன்னமே அறிவார்.



எனவே, உலகத்தோற்றத்துக்கு முன்னே நம்முடைய பெயர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்ட அந்த நாளையும் அவர் அறிந்திருந்தார்.

இயேசு கூறினது போல், உலகத்தில் பிரசங்கிக்கப்படுகிற சுவிசேஷமானது, வலையை கடலில் போட்டு சகல விதமான மீன்களையும் கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை எறிந்து போடுவதேயல்லாமல் வேறொன்றும் இல்லை.

அப்படியானால், பிரசங்கம் செய்வதினால் என்ன பயன் என்று நீங்கள் கூறலாம்? ஒரு பிரசங்கி செய்ய வேண்டிய பங்கு அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.

பரலோக ராஜ்யம் கடலில் போடப்பட்ட சகலவிதமான மீன்களையும் சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு ஒப்பாயிருக்கிறது.

எனவே, அநேக மீன்கள் கடலில் இருக்கிறது, கடைசியான ஒன்று பிடிக்கப்பட்டு கொண்டு வரப்படும்போது, அதுவே முடிவாயிருக்கும்.



எனவே, ஒரு பிரசங்கி வெறுமனே வலையை வீசி, இழுக்கிறான். வேதாகமம் போதிக்கிறது, அந்த பெரிய வலையில் அவன் சகலவிதமான ஜீவன்களையும் பிடித்துக்கொண்டு வருகிறான்.

அவன் நீர்சிலந்தி (water spider) தவளை, பாம்பு, பல்லி, உணவு ஆமைகள் (terrapin)

தலைப்பிரட்டை மற்றும் மீன்களையும் பிடித்து வருகிறான்.

இப்பொழுது, எது மீன், எது தலைபிரட்டை என்று தீர்மானிப்பது அல்லது நிதானிப்பது என்னுடையது அல்ல.

ஆனால், நீங்கள் அவர்களை கவனித்து பார்ப்பீர்களானால், அவர்களுக்குள்ளாக இருக்கிற சுபாவம் அவர்கள் என்னவாயிருக்கிறார்கள் என்பதை நிரூபிக்கும். அது சரிதான். அது மிகவும் உண்மையாயிருக்கிறது.

19. சுவிசேஷ கூட்டம் நடப்பதை நீங்கள் கவனியுங்கள். அநேகர் பிரசங்க பீடத்தண்டை வந்து சுற்றி நிற்பார்கள். நிச்சயம், வலை அவர்களை பிடித்து இழுத்தது.

அங்கே கொஞ்ச நேரம் கழித்து ஒரு வயதான உணவு ஆமை தலையை தூக்கி, 'நான் அதை துவக்கத்திலேயே விசுவாசிப்பது இல்லை" என்று சொல்லும். அது

துவக்கத்திலேயே ஒரு உணவு ஆமை, அவ்வளவுதான்.



மேலும், 'உனக்குத் தெரியுமா, அந்த பரிசுத்த உருளையர் கூட்டத்தைக் குறித்து ஏதோ காரியம் இருக்கிறது. என்னால் அவர்களை ஏற்றுக் கொள்ளவே முடியவில்லை", என்று பாம்பு சொல்லும். அது துவக்கத்திலேயே ஒரு பாம்பு அவ்வளவுதான்.

அதன்பின் நீர் சிலந்தி பிளாப் (flop), பிளாப், பிளாப், கிளங் (clunk), கிளங் என்று சத்தம் போட்டுக் கொண்டே திரும்பி சென்று விடும். ஏனெனில் அது துவக்கத்திலேயே அவ்விதமாய்தான் இருந்தது.

வலையானது அவைகள் மீது வீசப்பட்டபோது, அவையாவும் அவ்விதமாகத்தான் இருந்தன. அது மிகவும் சரியே.

ஆனால் அதன் மீது வலை வீசப்பட்டபோது மீன், மீனாகத்தான் இருந்தது. நாம் மீனுக்காக வலையைப்

போடுகிறோம். அதை தேவன் ஒருவர் மட்டுமே தீர்மானிக்க முடியும்.



பிசாசு முதன்முறையாக ஒரு சிறு குறையை உங்களுக்கு காண்பிக்க நேரிட்டால், நீங்கள் விலகிவிடுகிறீர்கள். நீங்கள் துவக்கத்திலேயே அதை விசுவாசிக்கவில்லை என்பதை அது காண்பிக்கிறது.



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**

# ***மத்தேயு*** 13:47-50




47. அன்றியும், பரலோகராஜ்யம் கடலிலே
போடப்பட்டு, சகல விதமான மீன்களையும்
சேர்த்து வாரிக்கொள்ளும் வலைக்கு
ஒப்பாயிருக்கிறது.

48. அது நிறைந்தபோது, அதைக் கரையில்
இழுத்து உட்கார்ந்து, நல்லவைகளைக்
கூடைகளில் சேர்த்து, ஆகாதவைகளை
எறிந்துபோடுவார்கள்.

49. இப்படியே உலகத்தின் முடிவிலே
நடக்கும். தேவதூதர்கள் புறப்பட்டு,
நீதிமான்களின் நடுவிலிருந்து
பொல்லாதவர்களைப் பிரித்து,

50. அவர்களை அக்கினிச் சூளையிலே
போடுவார்கள்; அங்கே அழுகையும் பற்கடிப்பும்
உண்டாயிருக்கும் என்றார்.

## வில்லியம் மரியன் பிரன்ஹாம்

62-0705 ***யேகோவா யீரே*** #1, Grass Valley, California, USA

33. இப்பொழுது நாம் ஆதியாகமம் 12-ம் அதிகாரத்துக்கு செல்வோம்.

தேவன் ஆபிரகாமை கிருபையினால் அழைத்தார். அவன் வித்தியாசமான ஒருவனாய் இருந்தான் என்பதனால் அல்ல.

அவன் வெறும் ஆபிரகாமாக, சாதாரண மனிதனாக இருந்தான். அவன் ஒரு ஆசாரியன் அல்லது கீர்த்தி வாய்ந்தவன் என்பதனால் அல்ல. அவன் ஒரு விவசாயி.

அவன் தன் தகப்பனுடன் பாபிலோன் கோபுரமிருந்த நகரத்தை விட்டுப் புறப்பட்டு கல்தேயருடைய பட்டினமாகிய ஊர் என்னுமிடத்துக்கு சென்றான். அவன் ஒரு

விவசாயி. ஒருக்கால் அவன் பகல் நேரத்தில் விவசாயம் செய்து பயிரிட்டிருப்பான்.



அவன் தனக்கு ஒன்றுவிட்ட சகோதரியாகிய சாராளை விவாகம் பண்ணினான், அவர்களுக்குப் பிள்ளையில்லை.

தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, அவனுக்கு எழுபத்தைந்து வயது, சாராளுக்கு அறுபத்தைந்து வயது.

தேவன் ஆபிரகாமை அழைத்த போது, ''உன்னை ஜாதிகளுக்குத் தகப்பனாக்குவேன்'' என்றார். அவர் சாராளின் மூலம் அவனுக்கு ஒரு பிள்ளையைக் கொடுப்பதாக வாக்களித்தார்.

அவனுடைய சரீரம் செத்துப் போயிருந்தது. அவளுக்கு அறுபத்தைந்து வயது. ஸ்திரீகளுக்குள்ள வழிபாடு அவளுக்கு நின்றுபோய் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் ஆகியிருந்தன. அவன் தன் ஒன்றுவிட்ட சகோதரியான அவளுடன், அவளுக்கு ஏறக்குறைய பதினாறு அல்லது பதினெட்டு வயது ஆன முதற்கே வாழ்ந்து வந்தான்.

இத்தனை ஆண்டு காலமாக, அவனுக்கு எழுபத்தைந்து வயது ஆகும் வரைக்கும் அவளுக்கு அறுபத்தைந்து வயது ஆகும்

வரைக்கும், அவன் அவளுக்கு கணவனாக வாழ்க்கை நடத்தி வந்தான்.



அதன் பிறகு தேவன் இறங்கி வந்து, "அவள் மூலமாய் உனக்கு ஒரு பிள்ளையைத் தரப் போகிறேன்'' என்கிறார். அவன் தேவனுடைய வாக்குத்தத்தத்தைக் குறித்து அவிசுவாசமாய் சந்தேகப்படாமல், அதை முழு நிச்சயமாக நம்பினான்.

34. எழுபத்தைந்து வயது நிரம்பிய ஒரு கிழவனும், அறுபத்தைந்து வயதான ஒரு ஸ்திரீயும் மருத்துவரிடம் சென்று, "மருத்துவரே, மருத்துவமனையை நீங்கள் ஆயத்தமாக வைக்க வேண்டும். நாங்கள் எந்த இரவு நேரத்திலும் உம்மை அழைக்கக் கூடும். ஏனெனில் எங்களுக்கு ஒரு பிள்ளை பிறக்கப்போகின்றது" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா?

மருத்துவர், "சரி, ஐயா. நீங்கள்... உ, உ, உ!" என்று கூறி விட்டு, அவர்கள் சென்றவுடன், "அவர்களைப் போய் பார்த்து விட்டு வா. அவர்களுக்கு ஏதோ மூளைகோளாறு ஏற்பட்டுள்ளது" என்பார்.

தேவனுடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொண்டு விசுவாசிக்கும் எவனையும் உலகம் பைத்தியக்காரன் என்று கருதுகிறது.

பவுல், "இவர்கள் மதபேதம் (heresy) என்று சொல்லுகிற மார்க்கத்தின்படியே எங்கள் முன்னோர்களின் தேவனுக்கு ஆராதனை செய்கிறேன்" என்றான். (அப்

24:14) "மதபேதம்'' (heresy) என்பது “பைத்தியக்காரத்தனம்” (crazy) என்று நாமறிவோம். அது மாம்ச சிந்தைக்கு முட்டாள்தனமாக உள்ளது.



விசுவாசமும் அதைக் கொண்டிருப்பவனும் தேவனைத் தவிர மற்றெல்லாருக்கும் பைத்தியக்காரத்தனமாக காணப்படுகின்றனர். அது உண்மை.

35. தேவன் ஆபிரகாமுக்கு வாக்குத்தத்தம் செய்தார், ஆபிரகாம் அதை விசுவாசித்தான்.

அவன், ''தேவனே, அது எப்படி முடியும்?'' என்று கேட்கவில்லை. அவன், "சரி தேவனே, அதை நான் விசுவாசிக்கிறேன்'' என்றான்.

அவன் வீட்டுக்குச் சென்று, ''சாராளே, நாம் கடைக்கு சென்று பல கெஜம் கம்பளி நூலையும், அதை பின்னுவதற்கு ஊசிகளையும், காலுறைகளையும் வாங்கி வருவோம். நமக்கு குழந்தை பிறக்கப் போகின்றது'' என்று கூறுவதை என்னால் காணமுடிகிறது.

ஓ, என்னே! முதல் முப்பது நாட்கள் கடந்துவிட்டன. இல்லை இருபத்தெட்டு நாட்கள். "அன்பே, உனக்கு எப்படியிருக்கிறது?'' ''ஒரு வித்தியாசமும் இல்லை''. ''கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாம் எப்படியும் அதை பெறப் போகின்றோம்.'' ''உங்களுக்கு எப்படி தெரியும்?'' "தேவன் அவ்வாறு கூறினார்.''



நம்மில் சிலருக்கு ஒரு இரவு ஜெபம் ஏறெடுக்கப்படுகின்றது. கூட்டத்தில் அமர்ந்துள்ளபோது பரிசுத்த ஆவி விழுகின்றது. ஆனால் அடுத்த நாள் காலை நமக்கு உடல்நிலை சரியில்லையென்றால், "எனக்கு இன்னும் வயிற்றில் சிறிது கோளாறு உள்ளது. என்னால் கைகளை அசைக்கவே

முடியவில்லை'' என்றெல்லாம் கூறுகிறோம். ஆபிரகாமின் சந்ததியே, தேவனுடைய வாக்குத்தத்தத்தை அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல் விசுவாசியுங்கள்.

36. சபையில் ஏதாவதொன்று தோன்றி, பிசாசு ஒரு கூட்டம் மக்களிடையே புகுந்து அந்த சபையோரை துன்புறுத்தக்கூடும். முதலாவதாக நடப்பது என்ன தெரியுமா? அவர்களில் சிலர், "இந்த பழமையான காரியத்தை விட்டு விலகப்போகின்றேன். துவக்கத்திலிருந்தே அதில் ஒன்றுமில்லை'' என்கின்றனர். நீங்கள் ஆபிரகாமின் சந்ததியா?

பிசாசு முதன்முறையாக ஒரு சிறு குறையை உங்களுக்கு காண்பிக்க நேரிட்டால், நீங்கள் விலகிவிடுகிறீர்கள். நீங்கள் துவக்கத்திலேயே அதை விசுவாசிக்கவில்லை என்பதை அது காண்பிக்கிறது.



இயேசு, "பரலோக ராஜ்யம், ஒரு மனிதன் வலையை எடுத்துக்கொண்டு கடலுக்குச் சென்று அதை கடலில் போட்டதற்கு ஒப்பாயிருக்கிறது. அவன் வலையை இழுத்தபோது, எல்லாவற்றையும் வாரிக் கொண்டான்" என்றார். (மத் 13:47) அது உண்மை.

ஒரு எழுப்புதல் அதைத்தான் செய்கிறது. அது எல்லாவற்றையும் வலையில் பிடிக்கிறது.

வலையில் என்ன இருக்கிறது? தவளைகள், சிலந்திகள், ஆமைகள், பாம்புகள், மீன்கள்- ஆகிய அனைத்தும்.

சில நாட்கள் கழித்து ஆமை, ''இது என்னுடைய இடமல்ல'' என்று சொல்லிவிட்டு சேற்றுக்குள் சென்றுவிடுகிறது.

தண்ணீர் சிலந்தியும் சுற்று முற்றும் பார்த்துவிட்டு, ''ஊ! எனக்கு இங்கு சீட்டு விளையாட்டு இல்லை'' என்று சொல்லிவிட்டு சேற்றுக்கு திரும்பிவிடுகிறது - பன்றி தான் முன்பிருந்த சேற்றுக்கு திரும்புவதைப் போலவும், நாய் தான் கக்கினதைத் தின்பது போலவும், அது உண்மை.

இவர்கள் ஆபிரகாமின் சந்ததியா? ஓ, என்னே! பெருத்த அவமானம்! ஆபிரகாமின் சந்ததி தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கும்.




ஆனால் அந்த பரிசேயனோ அவரை விருந்துக்கு அழைத்துவிட்டு பேசாமலிருந்தான். அவர்கள் அவருடைய பாதங்களைக் கழுவவில்லை. அவருக்கு ஒன்றுமே செய்வில்லை. அவரை அங்கு உட்கார வைத்து விட்டு அவரைக் கேலி செய்தனர்.



**வில்லியம் மரியன் பிரன்ஹாம்**



லூக்கா 7:36-50

36. பரிசேயரில் ஒருவன் தன்னுடனே போஜனம்பண்ண வேண்டுமென்று அவரை வேண்டிக்கொண்டான்; அவர் அந்தப் பரிசேயனுடைய வீட்டில் பிரவேசித்துப் பந்தியிருந்தார்.

37. அப்பொழுது அந்த ஊரிலிருந்த பாவியாகிய ஒரு ஸ்திரீ அவர் பரிசேயன் வீட்டிலே பந்தியிருக்கிறதை அறிந்து, ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து,

38. அவருடைய பாதங்களின் அருகே பின்னாக நின்று அழுதுகொண்டு, அவருடைய பாதங்களைத் தன் கண்ணீரினால் நனைத்து, தன் தலைமயிரினால் துடைத்து, அவருடைய பாதங்களை முத்தஞ்செய்து, பரிமளதைலத்தைப் பூசினாள்.

39. அவரை அழைத்த பரிசேயன் அதைக் கண்டபோது, இவர் தீர்க்கதரிசியாயிருந்தால் தம்மைத் தொடுகிற ஸ்திரீ இன்னாளென்றும் இப்படிப்பட்டவளென்றும் அறிந்திருப்பார்; இவள் பாவியாயிருக்கிறாளே என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டான்.

40. இயேசு அவனை நோக்கி: சீமோனே, உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும்

என்றார். அதற்கு அவன்: போதகரே, சொல்லும் என்றான்.



41. அப்பொழுது அவர்: ஒருவனிடத்தில் இரண்டுபேர் கடன்பட்டிருந்தார்கள்; ஒருவன் ஐந்நூறு வெள்ளிக்காசும், மற்றவன் ஐம்பது வெள்ளிக்காசும் கொடுக்கவேண்டியதாயிருந்தது.

42. கொடுக்க அவர்களுக்கு நிர்வாகமில்லாதபோது, இருவருக்கும் கடனை மன்னித்துவிட்டான். இப்படியிருக்க, அவர்களில் எவன் அவனிடத்தில் அதிக அன்பாயிருப்பான்? அதைச் சொல் என்றார்.

43. சீமோன் பிரதியுத்தரமாக: எவனுக்கு அதிகமாய் மன்னித்துவிட்டானோ அவனே அதிக

அன்பாயிருப்பான் என்று நினைக்கிறேன் என்றான்; அதற்கு அவர்: சரியாய் நிதானித்தாய் என்று சொல்லி,



44. ஸ்திரீயினிடமாய்த் திரும்பி, சீமோனை நோக்கி: இந்த ஸ்திரீயைப்பார்க்கிறாயே; நான் உன் வீட்டில் பிரவேசித்தேன், நீ என் கால்களுக்குத் தண்ணீர் தரவில்லை, இவளோ, கண்ணீரினால் என் கால்களை நனைத்து, தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள்.

45. நீ என்னை முத்தஞ்செய்யவில்லை, இவளோ நான் உட்பிரவேசித்தது முதல், என் பாதங்களை ஓயாமல் முத்தஞ்செய்தாள்.

46. நீ என் தலையில் எண்ணெய் பூசவில்லை, இவளோ என் பாதங்களில் பரிமளதைலம் பூசினாள்.



47. ஆதலால் நான் உனக்குச் சொல்லுகிறேன்: இவள் செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது; இவள் மிகவும் அன்புகூர்ந்தாளே. எவனுக்குக் கொஞ்சம் மன்னிக்கப்படுகிறதோ, அவன் கொஞ்சமாய் அன்பு கூருவான் என்று சொல்லி;

48. அவளை நோக்கி: உன் பாவங்கள் மன்னிக்கப்பட்டது என்றார்.

49. அப்பொழுது கூடப் பந்தியிருந்தவர்கள்: பாவங்களை மன்னிக்கிற இவன் யாரென்று தங்களுக்குள்ளே சொல்லிக்கொண்டார்கள்.

50. அவர் ஸ்திரீயை நோக்கி: உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது, சமாதானத்தோடே போ என்றார்.



# வில்லியம் மரியன் பிரன்ஹாம்

## 62-0603 கடைசிக் கால சுவிசேஷபணி,
Jeffersonville, Indiana, USA

115. இயேசுவின் பாதங்களைக் கழுவின அந்த ஸ்திரீயை கவனித்தீர்களா? அவள் ஆசீர்வாதத்தைக் கேட்கவேயில்லை, அவள் அங்கு பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த மாய்மாலக்காரன் அவரை பரிகாசம் செய்து, அவளுடைய நடத்தையைக் குறைவுபடுத்தி பேசினான். அதைத்தான் அவர்கள் எப்பொழுதும் செய்து வருகின்றனர். அவர் இழிவாகக் காணும்படி செய்கின்றனர். அதை செய்வதற்கென சிலர் அவர் பின்னால் சென்றனர். அவர்கள், "நல்ல போதகரே, நீர் மகத்தான தேவனுடைய மனிதர் என்று அறிந்திருக்கிறோம். நீர் எதற்கும் பயப்படுகிறதில்லை. நாங்கள் இராயனுக்கு

வரி கொடுக்க வேண்டுமா?'' என்றனர். பாருங்கள்? இப்படிப்பட்ட காரியங்கள் அவருடைய பெயரை இழிவுபடுத்த ஏதாவதொன்றைக் கண்டுபிடிக்க முயலுதல். இந்த பரிசேயன் அவரை விருந்துக்கு அழைத்தான். அவர்கள் அவரை அழைப்பார்கள் என்று அந்த ஸ்தாபனம் அறிந்திருந்தது. ஏதோ ஒரு நோக்கத்திற்காக அங்கு அழைத்தனர்.



116. உங்களை கிறிஸ்துவின் நிமித்தம் வெறுப்பவர்கள் உங்களை அழைப்பதை நீங்கள் கண்டால், உங்களிடமிருந்து அதிக பணம் பிடுங்குவதற்காக அல்லது உங்களை எந்த விதத்திலும் உபயோகிக்க வேண்டும் என்பதற்காகவே. பாருங்கள்? அவர்கள் செய்தியை விசுவாசிப்பதில்லை. எனவே ஏதோ ஒன்றிற்காக அவர்கள் உங்களை அழைத்திருப்பார்கள். அதே கிறிஸ்து. அதை இன்று பகுத்தறியமாட்டார் என்றா நினைக்கிறீர்கள்? அவர் நிச்சயமாக அறிந்து கொள்வார். அவரை அவர்கள் உள்ளே கொண்டுவந்து, “நாங்கள் அதை நிரூபிப்போம்” என்றனர். அவர் துர்நாற்றங் கொண்டவராய் உள்ளே வரும்படி அனுமதித்தனர். அவருடைய கால்களை அவர்கள் கழுவவில்லை, அவருக்கு வரவேற்பு கொடுக்கவில்லை அவர்கள் நீண்ட அங்கிகளை அணிந்து நடந்து வருவது வழக்கம். குதிரைகள் செல்லும் பாதைகளிலே அவர்கள் அக்காலத்தில் நடந்து வருவார்கள். அப்பொழுது அந்த நீண்ட அங்கி அந்த

துர்நாற்றத்தை கிரகித்துக் கொள்ளும். அந்த துர்நாற்றம் அவர் மேல் இருந்தது. பாதையிலிருந்த தூசும் அவர்மேல் படிந்து அவர் துர்நாற்றம் கொள்ளக் காரணமாயிருந்தது. தானியக் களஞ்சியக் கொல்லைகளில் வீசும் துர்நாற்றத்தைப் போன்றது அவர்மேல் இருந்தது. அவர்கள் விருந்துக்கு அழைப்பவரின் வீட்டுக்கு வரும்போது தரையில் விலையேறப் பெற்ற கம்பளம் விரித்திருக்கும். அவர்கள் ஒரு விதமான தைலத்தை வைத்திருந்தனர். விருந்தாளிகள் கைகளும் கால்களும் கழுவின பின்பு, அவர்களுக்கு ஒருஜதை படுக்கையறை காலணிகளைக் கொடுத்து அதை அவர்கள் கால்களில் போட்டு விடுவார்கள். அவர்கள் உடை மாற்றி, தலைசீவிக் கொண்டு விருந்துக்காக ஆயத்தமானவுடன்; விருந்து கொடுப்பவர்கள் விருந்தாளிகளை சந்தித்து ஒருவரையொவர் கட்டித் தழுவி வாழ்த்துவார்கள். பாருங்கள்? சற்று முன்பு நானும், ஜோசப்பும் எங்கள் கரங்களைப் போட்டு, ஒருவரையொருவர்

கட்டிக் தழுவி கொண்டது போல, அவர்கள் ஒருவரையொருவர் கழுத்தில் முத்தமிடுவார்கள். ஆனால் அந்த பரிசேயனோ அவரை விருந்துக்கு அழைத்துவிட்டு பேசாமலிருந்தான். அவர்கள் அவருடைய பாதங்களைக் கழுவவில்லை. அவருக்கு ஒன்றுமே செய்வில்லை. அவரை அங்கு உட்கார வைத்து விட்டு அவரைக் கேலி செய்தனர்.



117. ஆனால் ஒரு எளிய, இழிவான வேசி, அவளுடைய நடத்தைகெட்ட வாழ்க்கையின் மூலம் சில காசுகள் சம்பாதித்து வைத்திருந்தாள். அவர் அங்கு உட்கார்ந்திருப்பதை அவள் கண் டாள். அவளுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவள் சென்று தன்னிடமிருந்த பணத்துக்கு பரிமளத் தைலத்தை வாங்கினாள். அவள் மெல்ல அவரிருந்த இடத்தை அடைந்து, அவருடைய கால்களில் விழுந்து, அழத்தொடங்கினாள். அவளுடைய கூந்தல் அவிழ்ந்து தரையில் விழுந்தது. அவள் அழுது தன் தலைமயிரை எடுத்து... அவருடைய கால்களைக் கழுவின பிறகு துடைப்பதற்கு அவர்கள் துணியொன்றும் அங்கு வைத்திருக்கவில்லை. அவள் தன் தலைமையிரால் அவருடைய பாதங்களை துடைத்தாள். அவருடைய பாதங்களுக்கு எவ்வளவு அருமையான தண்ணீர் - மனந்திரும்பின் பாவியின் கண்ணீர் அவர் பாதத்தை அசைத்திருந்தால், அவள் குதித்தெழுந்து இருப்பாள், அவள்

ஒன்றையும் கேட்கவில்லை, அப்படி செய்ய வேண்டியது அவசிமென்று அவள் உணர்ந்தாள்.



118. இன்றைக்கு நாம் அப்படி செய்யக் கூடாதா? நாம் ஒன்றையும் கேட்கவில்லை. அது செய்யவேண்டியது அவசியம். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டியது அவசியம். நமக்கு ஒரு பைசா கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும், அதனால் ஒரு வித்தியாசமும் இல்லை. என் வாழ்க்கையில் நான் காணிக்கை எடுத்ததே கிடையாது. ஆனால் இது ஒரு அவசியத்திற்காக, ஒரு நோக்கத்திற்காக. நீங்கள் பிரிந்து விடுகிறீர்கள். சபை உங்களை வெறுக்கிறது, உங்களை புறம்பாக்குகிறது. உங்களுக்குள்ள ஒரு சில நண்பர்களுடன் மாத்திரம் நீங்கள் ஒன்று கூடுகின்றீர்கள். ஆனால் இது ஒரு செய்தி என்ன நேர்ந்தாலும், இது செல்ல வேண்டும். நான் வானொலியிலும் தொலைகாட்சியிலும் பிரசங்கிப்பதில்லை, அப்படி செய்தால், ஜனங்களிடம் பணத்துக்காக யாசிக்க வேண்டிவரும். அப்படி என்னால் செய்ய முடியாது. நான் உங்கள் சகோதரனாயிருக்க விரும்புகிறேன். தேவன் என்னை எங்கு அனுப்புகிறாரோ,

அங்கு செல்ல விரும்புகிறேன். அங்கு ஐந்து பேர் இருந்தாலும், அங்கு செல்ல விரும்புகிறேன். அங்கு பத்து லட்சம் பேர் இருந்தாலும், அங்கு செல்ல விரும்புகிறேன். நான் செல்வதற்கு தேவன் ஒரு வழியை உண்டு பண்ணுவார். அவ்வளவுதான். விசுவாச வாழ்க்கையை நான் வாழ்கிறேன். நாம் எல்லோருமே அதைத்தான் செய்யவேண்டும். தேவனுக்கு ஸ்தோத்திரம். அநேகர் அவ்வாறு வாழ்ந்து வருகின்றனர். அது உண்மை. அவர்கள் அப்படி செய்கின்றனர்.



119. இந்த ஸ்திரீயை பாருங்கள். இயேசு தம் பாதத்தை அசைக்கவேயில்லை. அங்கு நின்று கொண்டிருந்த பரிசேயன் அவரைக் கேலி செய்வதைக் கவனியுங்கள், அவன், "இவர் தீர்க்கதரிசியாயிருந்தால், இவருடைய பாதங்களைக் கழுவும் பெண் எப்படிப்பட்டவள் என்பதை அறிந்திருப்பார். பாருங்கள்? அவர் அருகிலுள்ள பெண் எப்படிப்பட்டவள் என்பதை அறிந்திருப்பார். அவர் எப்படிப்பட்ட வகுப்பினருடன் தொடர்பு கொண்டுள்ளார் என்பதை அது காண்பிக்கிறது" என்றான். அதைக் குறித்து நான் மகிழ்ச்சி கொள்கிறேன். ஆம், அவர் அறிந்திருந்தார், அவருடன் இருக்கும் ஜனங்கள் எப்படிப்பட்ட வகுப்பினர் என்பதைப் பாருங்கள். நாம் கனமுள்ளவர்கள். நாம் சபை அங்கத்தினர்கள். அவருடன் கூட உள்ள அந்த பாவியான ஸ்திரீயை பாருங்கள். அவள் யாரென்று நமக்குத் தெரியும். அவள் தெருவில் செல்பவள் அவள்... நான் என்ன கூறுகிறேன் என்று புரிகிறதா? "அவள்

அப்படிப்பட்ட ஒருஸ்திரீ. பாருங்கள், பாருங்கள், அப்படிப்பட்டவர்கள் தான் அவரைச் சூழ்ந்துள்ளனர்". நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.



120. நானும் அப்படிப்பட்டவனாய் தான் இருந்தேன். நான் அந்த வகையை சேர்ந்தவன், நல்லவனேயில்லை, பாவி, அவரிடம் வராத நீங்கள் ஒவ்வொருவரும் அந்த நிலையில்தான் இருக்கிறீர்கள். ஒரு சபையின் அங்கத்தினராக ஆவதற்காக நீங்கள் வருவதில்லை, ஏதோ ஒன்று செய்யப்படவேண்டும் என்பதற்காக நீங்கள் வருகின்றீர்கள். இயேசுவுக்கு பணிவிடை செய்ய வேண்டியது அவசியமாயுள்ளது. அதற்கு யாராவது இருக்கவேண்டும். அதை நாம் செய்வோம். அவள் “ஆண்டவரே, என்னை ஆசீர்வதிப்பீரா? இதை செய்வீரா?” என்று கேட்கவில்லை. இல்லை. அவள் அவருடைய பாதங்களைக் கழுவி தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். பாதங்களைத் துடைக்க போதுமான தலைமயிரைப் பெற நமது சகோதரிகளில் சிலர் தலைகீழாக நிற்க வேண்டுமென்பது உங்களுக்குத் தெரியும். அவள் அதோ இருக்கிறாள். அவளுடைய அழகான சுருண்ட தலைமயிர் கீழே தொங்கிக்

கொண்டிருக்கிறது. அவருடைய பாதங்களை அவள் துடைத்தாள். அவள் இப்படியாக அவருடைய பாதங்களை ஓயாமல் முத்தம் செய்து கொண்டேயிருந்தாள். இயேசு உட்கார்ந்து, அவளையே கவனித்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு அங்குலம் கூட அசையவில்லை. சற்று கழிந்து அவள் முடித்தவுடனே அவர் திரும்பிப் பார்த்தார்.



121. அங்கு சீமோன் தன் போதகர் சங்கத்துடன் நின்று கொண்டிருந்தான். அவன்,

"பாருங்கள்! ஹா! ஹா! அது தான் அவர். பார்த்தீர்களா? அவர் யாரென்பதை அது காண்பிக்கின்றது. அவர் தீர்க்கதரிசியல்ல. அவரைப் பாருங்கள்'' என்று கேலிசெய்தான். அவர் திரும்பிப் பார்த்து, ''சீமோனே" என்றார். ஓ, அவன் முகம் சிவந்திருக்கும் என்று நினைக்கிறேன். அவர், "உனக்கு நான் ஒரு காரியம் சொல்லவேண்டும். நீ என்னை இங்கு அழைத்தாய். பார்? நான் உன் வீட்டில் பிரவேசித்தேன். நீ என் கால்களைக் கழுவவில்லை, நீ எனக்கு வரவேற்பு முத்தம் கொடுக்கவில்லை, நீ என் தலையில் என்ணெய் பூசவில்லை. நீ அங்கு நின்று கொண்டு என்னை கேலி செய்து கொண்டிருந்தாய். பார்? அந்த நோக்கத்துக்காகவே நீ என்னை இங்கு அழைத்து வந்தாய். ஆனால் இந்த ஸ்திரீயோ, நான் உட்பிரவேசித்தது முதல், ஓயாமல் தன் கண்ணீரினால் என் பாதங்களைக் கழுவி தன் தலைமயிரினால் அவைகளைத் துடைத்தாள். அவள் ஓயாமல், என் கழுத்தையல்ல, என் பாதங்களை முத்தஞ் செய்தாள்'' என்றார்.

''சகோதரியே, நீ ஒன்றையும் எதிர்பார்க்கவில்லை, இல்லையா? ' "இல்லை'' "நான் உனக்குச் சொல்லுகிறேன், நீ செய்த அநேக பாவங்கள் மன்னிக்கப்பட்டது'', பாருங்கள்? அவள் சரியான ஒன்றைச் செய்யவில்லை என்று ஒருக்கால் அவளுக்கு கடைசி வரை இருந்திருக்கும். ஆனால் அது செய்ய வேண்டிய அவசியம் உண்டாயிருந்தது. அவளுடைய பலனோ முடிவில் வந்தது.



122. இந்த செய்தியை நான் பிரசங்கிப்பதை நீங்கள் கேட்கலாம். பரிசுத்த ஆவியானவர் சிந்தனைகளைப் பகுத்தறிந்து, பெரிய காரியங்களைச் செய்து, அற்புதங்களை செய்வதை நீங்கள் காணலாம், நீங்கள் ஜெபம் செய்யலாம். ஆனால் அது நிறைவேறாமல் இருக்கக் கூடும். சென்று கொண்டேயிருங்கள். உங்கள் பலன் முடிவில் வரும். அப்படி அங்கு வருவது நல்லதல்லவா? ஆம். பாருங்கள், இயேசுவுக்கு சேவை செய்யுங்கள். அதுவே முடிவுகால செய்தி. அவருக்கு ஒரு மணவாட்டியுண்டு. அவர் நற்பண்பை எதிர்பார்க்கிறார். எலியேசர் அந்த நற்பண்பை கண்டுபிடித்த பிறகு, அடுத்தபடியாக அவள் செல்ல அவளை ஆயத்தப்படுத்தினான். சகோதரனே. அதுவே இப்பொழுது நடக்கிறது. முடிவுகால செய்தி பாபிலோனில் கிடையாது.



# செய்தி: 62-0603 கடைசிக் கால சுவிசேஷபணி



# இயேசு கிறிஸ்துவின் உவமைகள்

## சகோ. பிரன்ஹாம் அவர்களின் மேற்கோள்கள்

3

படங்களுடன்